**அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் - 2017**

-----------------------------------------------------------------------

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1968 இன் 24 ஆம் இலக்க அரசாங்க அச்சக கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

----------------------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS)

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 07 இன் 31 மற்றும் 33 ஆம் பந்திகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் நிதி உபகரணங்களில் இருந்து (Financial Instruments) மீளாய்வாண்டின் இறுதியில் எழுகின்ற ஆபத்துக்களின் தன்மை மற்றும் முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்யும் வகையில் தேவையான பின்வரும் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- கூட்டுத்தாபனத்தின் நிதி அபாய முகாமைத்துவத்தின் நோக்கம் மற்றும் கொள்கை
- நிதி அபாயம் மற்றும் ஆபத்து ஏற்படக் கூடிய முறை

#### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

கீழே காண்பிக்கப்படுகின்ற இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

(i) நியமத்தின் 79(ஆ) பந்தியின் பிரகாரம் மூலதனத்தில் உள்ளடங்கியுள்ள ஒதுக்கத்தின் தன்மை, பேணப்படுகின்ற நோக்கம் போன்றவை தொடர்பாக வெளிப்படுத்தல் அவசியமாக இருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தால் பேணிச் செல்லப்படுகின்ற ரூபா 102,491 தொகையான மூலதன ஒதுக்கம், ரூபா 1,000,000 தொகையான பொது ஒதுக்கம், ரூபா 13,901,142 தொகையான அபிவிருத்தி ஒதுக்கம் மற்றும் ரூபா 701,192,812 தொகையான மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் தொடர்பான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 125 ஆம் பந்தியின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கூட்டுத்தாபனத்தால் கடதாசிகளைக் கொள்வனவு செய்வதற்காக திறக்கப்பட்டிருந்த ரூபா 6,648,040 தொகையான நாணயக் கடிதத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07**

(i) காசுப் பாய்ச்சல் கூற்றில் மூலதன மாற்றங்களில் உள்ளடங்கியுள்ள வியாபாரக் கடன் கொடுத்தோர் மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் மீதிகளின் குறைவு ரூபா 358,925 தொகை குறைத்து பதியப்பட்டிருந்ததுடன் காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றத்தில் உள்ளடக்கப்பட்ட வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகளின் குறைவு சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலைமைக் கூற்றின் பிரகாரம் ரூபா 142,927,462 ஆக இருந்த போதிலும், அது ரூபா 142,827,462 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்படாத முன்னைய ஆண்டின் சீராக்கமாக ரூபா 3,010,982 தொகையான தொங்கல் மீதியொன்று செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் கிடைத்த காசாக காண்பிக்கப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்று சமப்படுத்தப்பட்டிருந்தும் அதனுள் இனங்காணப்படாத சீராக்கம் ரூபா 111,345 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மதிப்பிடு செய்யப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம், லித்தோ பிரிவின் இயந்திரம் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 146,820,000 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் லித்தோ பிரிவின் இயந்திரம் மற்றும் உபகரணங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 40,000,000 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால், மீளாய்வாண்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 106,820,000 தொகை குறைத்துப் பதியப்பட்டிருந்தது. அதனுள் மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 106,820,000 தொகை குறைத்தும், வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 8,011,500 குறைத்தும் பதியப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட நட்டம் ரூபா 8,011,500 தொகை குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கையும் கடன்கொடுத்தோர் பேரேட்டின் மீதியையும் ஒப்பிடுவதற்காக இணக்கக் கூற்றொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட கடன்கொடுத்தோர் மீதி, கடன் கொடுத்தோர் பேரேட்டின் மீதியை விட ரூபா 1,456,119 தொகை அதிகமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், கடன்கொடுத்தோர் பேரேட்டில் ரூபா 1,941,784 தொகையான கடன்கொடுத்தோர் ரூபா 194,178 ஆக கடன்கொடுத்தோர் பேரேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க அச்சகத் திணைக்களத்தால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அந்த திணைக்களத்திற்கு ரூபா 10,535,542 தொகை அறவிடுவதற்கு உள்ளதாக அறிவிக்கப்பட்ட போதிலும், கூட்டுத்தாபனத்தால் அத்திணைக்களத்திற்காக ரூபா 2,754,825 தொகை மாத்திரம் செலுத்துவதற்கு உள்ளதாக கணக்குகளில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்கத்தால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அந்த திணைக்களத்தால் செலுத்துவதற்கு எந்தவொரு கடன் மீதியும் இல்லாததாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த திணைக்களத்தால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 11,836,011 தொகையொன்று செலுத்துவதற்குள்ளதாக கூட்டுத்தாபனத்தின் கணக்குகளில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 53,905,998 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 10,056,845 பெறுமதியான கடன்கொடுத்தோர் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 2013 மற்றும் அதற்கு முன்னிருந்து காணப்படுகின்ற தீர்க்கப்படாத கடன் மீதியாக காணப்பட்டது. அது மொத்தக் கடன்கொடுத்தோர் மீதியில் 19 சதவீதமாகும்.

(ஆ) 04 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 147,033,354 கூட்டுத்தொகையான வியாபாரக் கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன்பட்டோர் மீதியான ரூபா 527,327,575 இல் 28 சதவீதமாகும்.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் தேசிய கடதாசி கம்பனியிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 9,753,427 தொகை அறவிட வேண்டியிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தால் கடதாசிக் கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 7,460,675 ஆகக் காணப்பட்டது. இந்த மீதியில் 04 வருடங்களை விஞ்சிய கடன் தொகைகள் முறையே ரூபா 7,989,976 மற்றும் ரூபா 5,578,142 ஆக இருந்த போதிலும் இந்த மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கடதாசிக் கம்பனியின் வியாபார நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டமையால் இந்த மீதியை தீர்த்து வைத்தல் தொடர்பாக நிச்சயமற்ற நிலைமையொன்று அவதானிக்கப்படுகின்றது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1942 இன் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவு | தீ விபத்து அறிவிக்கும் சமிஞ்சை முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2015 மே 25 ஆந் திகதிய PED 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 4.2 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் மத்திய மட்டத்தில் 15 முகாமையாளர்களுக்காக குழு போக்குவரத்து சேவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 17,500 வீதம் மீளாய்வாண்டில் ரூபா 3,132,500 தொகையான படி செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | 2017 திசெம்பர் 11 ஆந் திகதிய PED 03/2017 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 01, 02 மற்றும் 03 ஆம் பிரிவுகள் | சுற்றறிக்கையின் பிரகாரம் மிகையூதியப்படி செலுத்துவதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டிற்காக ரூபா 50,190,854 தொகையொன்று மிகையூதியப் படியாக கூட்டுத்தாபனத்தின் தலைவரின் சிபாரிசின் அடிப்படையில் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2017 பெப்ரவரி 03 ஆந் திகதிய 2004/66 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டின் போது தகவல்களைக் கோரும் பதிவு செய்தல் பதிவேடு, முறைப்பாட்டுப் பதிவேடு மற்றும் நிராகரிக்கப்பட்ட விபரங்கள் அடங்கிய பதிவேடு என்பன பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை | அரசாங்க நிறுவனங்களினால் பிரஜைகள் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டு அதற்காக நிறுவனம் சார் பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிய முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா 229,273,949 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 74,649,560 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூப 154,624,389 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டில் மொத்த மிகை ரூபா 130,520,719 இனால் குறைவடைந்தமை மற்றும் நிதிச் செலவினம் ரூபா 37,624,144 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட நிதி விளைவின் வீழ்ச்சிக்கு பிரதான காணரமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை மிகையொன்று அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆம் ஆண்டில் பற்றாக்குறை 207 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 229,273,949 ஆக இருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம், அரசாங்க வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைச் சீராக்கும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 550,885,453 தொகையான கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு அதிகரித்து 2017 ஆம் ஆண்டின் இறுதியின் போது ரூபா 579,601,971 ஆக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாப விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதம் 2013 ஆம் ஆண்டு முதல் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டின் போது முறையே 35 சதவீதம் மற்றும் 3 சதவீதம் ஆன மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாப விகிதம் என்பன மீளாய்வாண்டின் போது முறையே 16 சதவீதம் மற்றும் மறை 18 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

அவ்வாறே கூட்டுத்தாபனத்தின் திரவத்தன்மையை வெளிப்படுத்தும் நடைமுறை மற்றும் விரைவு விகிதங்களும் வீழ்ச்சியடைந்திருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது முறையே 1.4:1 மற்றும் 1.05:1 ஆன நடைமுறை மற்றும் விரைவு விகிதங்கள் மீளாய்வாண்டின் போது முறையே 0.88:1 மற்றும் 0.63:1 வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---

### 4.1 செயலாற்றல்

---

#### 4.1.1 செயற்படுநிலையும் மீளாய்வும்

---

மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் செயலாற்றல் பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) பாடசாலை பாடத்திட்ட புத்தகங்களை அச்சிடல் மற்றும் லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்காக முறையே கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திடமிருந்தும், தேசிய லொத்தர் சபையிடமிருந்தும் மீளாய்வாண்டின் போது ரூபா 677,043,029 மற்றும் ரூபா 216,501,470 தொகைகளாக கூட்டுமொத்தமாக ரூபா 893,544,499 வருமானமொன்று கிடைத்திருந்தது. அது ஆண்டின் ஒட்டுமொத்த வருமான ரூபா 1,249,839,033 இல் 71 சதவீதமாகையால் கூட்டுத்தாபனத்தால் தனது வருமான மூலாதாரத்தை பரவலாக்காமல் இரண்டு வருமான மூலங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனத்தால் அல்லது இலங்கையின் வேறு நிறுவனத்தால் அச்சிடப்படுகின்ற புத்தகங்கள், கல்வி வெளியீடுகள், பத்திரிகை, நாளிதழ்கள், ஏனைய வெளியீடுகளின் விற்பனை, பகிர்ந்தளித்தல், ஏற்றுமதி செய்தல் மற்றும் இறக்குமதி செய்தல் என்பன கூட்டுத்தாபனத்தின் இலக்கிடப்பட்ட பணிகளாக இருந்ததுடன் அதன் மூலம் 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை உழைத்த வருமானம், கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த வருமானத்தில் 0.01 சதவீதம் முதல் 0.18 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டமையால் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் போதியளவான கவனஞ் செலுத்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் விற்பனைத் திட்டத்தின் பிரகாரம் கூட்டுத்தாபன வெளியீடுகளை விற்பனை செய்வதற்கு 24 பாடசாலைகள் மற்றும் 10 அரச நிறுவனங்களில் 34 கண்காட்சிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இரண்டு நிறுவனங்களில் இரண்டு கண்காட்சிகள் மாத்திரம் நடாத்தப்பட்டு, கிரயம் அதிகரித்ததன் காரணமாக கண்காட்சிகளை நடாத்துதல் கைவிடப்பட்டிருந்தது. எனினும், கிரயம் அதிகரித்தமையின் அடிப்படையில் அந்த தீர்மானம் எடுத்திருந்த போதிலும், சரியான கிரயத்தைக் கணிப்பிடலோ அல்லது கிரயநலப் பகுப்பாய்வோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

---

2018 ஆம் ஆண்டிற்காக பாடசாலை பாடவிதானப் புத்தகங்களை அச்சிடுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2018 ஆம் ஆண்டிற்காக பாடசாலை பாடவிதானப் புத்தகங்களை அச்சிடும் வகையில் தனியார் நிறுவனமொன்றின் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட ரூபா 179,801,775 கூட்டுப்பெறுமதியான 1,520 மெட்ரிக் தொன் கடதாசிகள் துறைமுகத்திலிருந்து தாமதித்து விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் ரூபா 5,037,480 தொகையான தாமதக் கட்டணம் இறக்குமதியாளரான மேற்கூறப்பட்ட

தனியார் கம்பனியினால் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும், அந்த தாமதக் கட்டணத்தில் ரூபா 1,457,013 தொகை கூட்டுத்தாபனத்தால் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பாடசாலை பாடவிதானப் புத்தகங்களை அச்சிடுவதற்காக பயன்படுத்தப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட கடதாசிகளின் தடிப்பு குறைவடைந்திருந்தமையால் அவற்றைப் பயன்படுத்தி அச்சிடப்பட்ட பாடசாலை பாடவிதானப் புத்தகங்களின் 18 வகைகளுக்காக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய தொகையில் ரூபா 1,084,990 தண்டப்பணமாக குறைக்கப்பட்டிருந்தது.

(இ) பாடசாலை பாடவிதானப் புத்தகங்களை அச்சிடுவதற்காக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அந்த பாடவிதானப் புத்தகங்களின் அட்டைக்காக 220 GSM வகையில் "Double Side Coated Art Board" பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், அதற்குப் பதிலாக 230 GSM "Double Side Coated Art Board" பயன்படுத்தப்பட்டமையினால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 1,056,362 தொகையான மேலதிக கிரயமொன்றைச் செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது. உற்பத்திக்காக உரிய 220 GSM வகையின் கடதாசி இருப்பு உச்ச மட்டத்தில் பேண்படாமை இதற்கு காரணமாக இருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

கூட்டுத்தாபனத்தின் 12 விற்பனைக் கடைகளில் 11 விற்பனைக் கடைகள் மீளாய்வாண்டில் இலக்கிடப்பட்ட விற்பனைகளில் 22 சதவீதம் முதல் 68 சதவீதம் வரையிலான வீச்சில் தமது விற்பனை இலக்குகள் அடையப்படவில்லை.

## 4.4 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கூட்டுத்தாபனத்தில் உள்ள லித்தோ அச்சிடல் பிரிவு, உத்தள அச்சிடல் பிரிவு மற்றும் புத்தகங்களை கட்டும் பிரிவு போன்றவைகளில் பாதீடு செய்யப்பட்ட இயந்திர மணித்தியாலங்களில் முறையே 33 சதவீதம், 34 சதவீதம் மற்றும் 85 சதவீதமாக கூட்டுமொத்தமாக 100,974 இயந்திர மணித்தியாலங்கள் வேலை இன்மையினால் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அந்த பிரிவுகளில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 238 பதவியணியினர்களும் இந்த நேரத்தில் தமது பணிகளில் ஈடுபட்டிருக்கவில்லை.

## 4.5 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பாதுக்கை பானலுவெஹியில் அமைந்துள்ள காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 107,000,000 தொகையான 13 ஏக்கர் 02 றூட் 06 பேர்ச் அளவு கைத்தொழில் நகரை அமைப்பதற்காக கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், இந்தக் காணியை சட்டரீதியாக அச்சபைக்கு கையளிப்பதற்கோ அல்லது மீளப் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக சரியான தீர்மானமொன்றை எடுப்பதற்கோ கூட்டுத்தாபனம் செயற்பட்டிருக்கவில்லை.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் தொடர்பான விபரம் 2012 ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிருந்ததுடன், தற்போது கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்த இயந்திர உபகரணங்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி செயற்பாடுகளை கவனத்தில் கொண்டு தேவையின் பிரகாரம் பதவியணியினரை (Cadre Assessment) திருத்தியமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் பயிற்சி திட்டத்தின் பிரகாரம் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட 36 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 05 மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் பயிற்சி திட்டத்திற்கு புறம்பாக 11 நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. எனினும், இந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கிடையே அச்சிடல் பணிகளில் ஈடுபடுகின்ற பதவியணியினர்களுக்காக 04 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் அச்சிடல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்ற 476 பேர்களையுடைய பதவியணியினரில் 17 பேர்கள் மாத்திரமே அதற்காக பங்குபற்றியிருந்தனர்.

## 4.7 சந்தைப் பங்கு

போட்டியாளர் சந்தையொன்றில் செயற்படுகின்ற அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்படுகின்ற பயிற்சி புத்தகங்களின் உற்பத்தி, புத்தக வெளியீடுகளை பிரசுரித்தல் மற்றும் ஏனைய வியாபார ரீதியான அச்சிடல் தொடர்பாக தங்களின் சந்தைப் பங்கை ஆய்வு செய்வதற்காக சந்தை மதிப்பீடொன்று மீளாய்வாண்டின் போதோ அல்லது அதற்கு முன்னைய ஆண்டின் போதோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

# 5. நிலைபேறான அபிவிருத்தி

## 5.1 நிலைபேறான அபிவிருத்திக்கான நோக்கத்தை அடைதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களாலும் செயற்படுத்த வேண்டியதாகக் காணப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்தால் தமது விடயப் பரப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியிருந்தது என்பது தொடர்பாக தெளிவுபடுத்தப்படாமையின் காரணமாக அதன் பணிகள் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடையக்கூடிய சந்தர்ப்பங்கள், இலக்குகளின் அடிப்படையில் அடைதலை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

# 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 6.1 பெறுகைகள்

லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 203,509,234 செலவில் இத்தாலியில் உற்பத்தி செய்யப்பட்ட Variable Data அச்சிடல் இயந்திரத்தின் கொள்வனவு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊடகத்துறை மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கொள்வனவு செய்வதற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் தொழில்நுட்ப மாதிரி ஒப்பீடு செய்யப்படாமல் கூறுவிலையின் அடிப்படையில் மாத்திரம் வழங்குனர் தெரிவு செய்யப்பட்டமையினால் சாத்தியவள ஆய்வு மற்றும் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட அச்சிடல் வேகம் நிமிடடொன்றிற்கு 230 மீற்றர் ஆன ஸட்வர்ண அச்சிடல் இயந்திரத்திற்குப் பதிலாக அச்சிடல் வேகம் நிமிடமொன்றிற்கு 80 மீற்றர் மற்றும் VDP கெமரா அலகின் ஆகக்கூடிய வேகம் நிமிடமொன்றிற்கு 50 மீற்றர் ஆன ஸட்வர்ண அச்சிடல் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

ஸட்வர்ண அச்சிடல் அலகில் அச்சிடல் வேகம் நிமிடமொன்றிற்கு 110 மீற்றர் ஆக இருந்தமையும் VDP கெமரா மற்றும் மடிப்புக்கள் (Folding) அலகின் வேகம் நிமிடத்திற்கு 65 மீற்றர் ஆக இருந்ததாகவும் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

20 செலவின விடயங்களுக்குரிய பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது 20 சதவீதம் முதல் 3,333 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.